**லங்கா சதொச லிமிடெட் கம்பனியின் கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கை - 2023**

---

லங்கா சதொச லிமிடெட் கம்பனியின் (“கம்பனி”) 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கருதுகின்ற கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுனர் தரப்பினரினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனத்தால் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்காணித்துக் கொள்ளல் வேண்டும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு வழிகாட்டியின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2023 ஆண்டிற்குரிய பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம்**

கம்பனியால் இறுதியாக தயாரித்த 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **நிதிக்கூற்றுக்களின் விடயங்கள்** | **பெறுமதி** |
|---|---|
| | ரூபா |
| <u>சொத்துக்கள்</u> | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 1,342,493,078 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 10,832,852,647 |
| | --------------- |
| **மொத்த சொத்துக்கள்** | **12,175,345,725** |
| | ======== |

| | |
|---|---|
| உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள் | |
| உரிமை மூலதனம் | (12,609,839,767) |
| பொறுப்புக்கள் | |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | 7,004,439,540 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 17,780,745,952 |
| | ----------------- |
| மொத்த பொறுப்புக்கள் | 24,785,185,492 |
| மொத்த உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள் | **12,175,345,725** |
| | =========== |
| மொத்த வருமானம் | 57,545,655,142 |
| மொத்த செலவினம் | 57,581,079,656 |
| | -------------- |
| **மிகை/ (பற்றாக்குறை)** | **(35,424,514)** |
| | ========= |

மேற்குறிப்பிட்ட தகல்களின் பிரகாரம் கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் மொத்த சொத்துக்கள் ரூபா 12,175,345,725 மற்றும் மொத்த பொறுப்புக்கள் ரூபா 24,785,185,492 ஆனமையால் மொத்த சொத்துக்களை விஞ்சிய மொத்த பொறுப்புக்கள் ரூபா 12,609,839,767 ஆனதால் கம்பனியின் தொடர்ச்சியான இருப்பு நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது.

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தில் இருந்து 2005 ஆம் ஆண்டின் போது கையேற்கப்பட்ட ரூபா 3,642,843 ஆன தொலைத் தொடர்பு உபகரணங்கள் தொடர்பான எழுத்து மூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாது இருந்ததுடன் நிலையான சொத்துப் பதிவேட்டிலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | ஸ்தாபனத்தில் இருந்து 2005 ஆம் ஆண்டின் போது கையேற்கப்பட்ட தொலைத் தொடர்பு இயந்திரங்கள் தொடர்பாக எந்த ஒரு சான்றுகளும் கண்டறிய முடியாதுள்ளதுடன் எதிர் காலத்தில் ஒட்டுமொத்த நிலையான சொத்துக்களையும் மெய்மையாய்வு செய்து நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கி நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துப் பதிவேட்டை சரியாகவும், நாளது வரையாகவும் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் நிலையான சொத்து பதிவேட்டை நாளது வரையாக பேணிச் செல்ல வேண்டிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்காக நிர்வாகக் குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டதுடன் அவற்றின் செயலாற்றல் | ஏற்றுக்கொள்கின்றோம். இது தொடர்பான தகவல்கள் எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும். | செயலாற்றல் மதிப்பீட்டிற்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 3.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 8(2)(அ)(ii) பிரிவு மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 16(i) ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் விற்பசைன் சாலைகளில் சேவையாற்றுகின்ற நாளாந்தம் சம்பளம் பெறுகின்ற 573 ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்காக பதிவு செய்து பங்களிப்புப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் நிரந்த மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுகின்ற சகல ஊழியர்களுக்காவும் குறித்துரைத்த பிரகாரம் EPF மற்றும் ETF செலுத்தப்படுகின்றது. | நாளாந்தம் சம்பளம் செலுத்துகின்ற ஊழியர்கள் சட்டத்தின் பிரகாரம் நிதியத்திற்காகப் பதிவு செய்து பங்களிப்புப் பணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 1/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூல் | | | |
| (i) | 3.2 ஆம் பந்தி | முகாமைத்துவ சேவை அங்கீகாரம் இன்றி பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டில் 10 உத்தியோகத்தர்களுக்கு கூட்டுமொத்தமாக ரூபா 2,500,000 இடைக்கால படியாகவும், பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் 05 பிரதி முகாமையாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபா 75,000 வீதம் கூட்டுமொத்தமாக ரூபா 3,292,500 செயலாற்றல் படியும் செலுத்தப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாது இருந்ததுடன் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தைப் பெற்று உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் படிகளைச் செலுத்துவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 3.5 ஆம் பந்தி | அமைச்சரவை அங்கீகாரம் இன்றி கம்பனியின் உத்தியோகத்தர் ஒருவர் 2022 மே 23 ஆந் திகதியில் இருந்து தற்காலிகமாக வரிசை அமைச்சுக்கு நியமிக்கப்பட்டதுடன் அத்திகதியில் இருந்து கணக்காய்வுத் திகதியான 2024 மார்ச் 31 ஆந் திகதி வரை சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 2,536,254 செலுத்தப்பட்டதுடன் அந்தத் தொகை அமைச்சில் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த உத்தியோகத்தர் 2024 செப்தெம்பர் 22 ஆந் திகதி முதல் மீண்டும் கம்பனிக்கு அறிக்கையிட்டிருந்தார். எதிர்காலத்தில் அமைச்சரவை அங்கீகாரம் இன்றி ஏனைய நிறுவனத்திற்கு ஊழியர்களை விடுவிக்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஏனைய நிறுவனங்களுக்கு உத்தியோகத்தர்களை நியமிக்கும் போது சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் படிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் வெளியிடப்பட்ட பொது முயற்சியாளர்களின் ஒன்றிணைந்த நல்லாளுகைக்கான வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் பந்தி | ஐந்து வருட கூட்டிணைந்த திட்டம், வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம், வருடாந்த பாதீட்டு மதிப்பீடு, உரிய ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டிற்குரிய அந்த திட்டங்கள் வழிகாட்டியின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரித்து திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை . | ஏற்றுக் கொள்கின்றோம். 2025 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டம், வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்படுவதுடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பின்னர் திறைசேரிக்கு சமரப்பிக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பாதீடு தயாரித்து திறைசேரிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2015 மே 25 ஆம் திகதிய பீஈடீ 01/2015 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை | கடமை மற்றும் தனிப்பட்ட பாவனைக்காக உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன்படுத்துதல் அல்லது உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக போக்குவரத்துப் படி பெற்றுக் கொள்வதற்கு உரித்து இன்றிய MM 1-1 தொகுதியில் பதவியில் ஈடுபட்டிருக்கின்ற 19 உத்தியோகத்தர்களுக்கு 2023 ஆம் ஆண்டின் போது போக்குவரத்துப் படியாக ரூபா 2,807,083 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | 2010 ஆம் ஆண்டின் MM 1-1 சம்பள குறியீட்டின் கீழ் சேவையாற்றிய உத்தியோகத்தர்கள் இருவருக்காக போக்குவரத்துப் படியாக ரூபா 12,500 பணிப்பாளர் சபையால் அங்கீகாரிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் போக்குவரத்துப் படி செலுத்த வேண்டியிருந்ததுடன் போக்குவரத்துப் படி உரித்து இன்றிய உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட தொகை அறவிடப்படல் வேண்டும். |
| (உ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 6.2 மற்றும் 6.4 ஆம் பந்திகள் | கம்பனியால் நடாத்திச் செல்லப்படுகின்ற உள்நாட்டு குடிபான விற்பனை நிலைய அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஆலோசனையாளர் நியமிக்கப்பட்டிருந்தார். சுற்றறிக்கையின் பிரகாரம் | இந்த ஆலோசனையாளர் சேவையில் இருந்து கேட்டு விலகியிருந்ததுடன் எதிர்காலத்தில் ஆலோசனையாளரைச் சேர்ப்பதாயின் பொது அரச நிதி சுற்றறிக்கைகளுக்கு இணங்க | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ஆலோசனையாளரை நியமித்தல் மற்றும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இவ்வாறான இவ்வாறான சேவை ஒன்று 90 நாட்களை விஞ்சாத குறிகிய கால அடிப்படையில் அவசர சேவை ஒன்றாக பெற வேண்டி இருந்ததுடன் ரூபா 150,000 ஆகக் கூடிய படி உரிய பதவிகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் அமைச்சு செயலாளரின் தனிப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்துதல் வேண்டும். எனினும் சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு முரணாக பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் மாதாந்தம் ரூபா 100,000 படியும் அமைய படி மற்றும் தொடர்புபட்ட மதுபான விற்பனை நிலைய அனுமதிப்பத்திரத்திற்காக ரூபா 25,000 படியும் திறைசேரி அங்கீகாரம் இன்றி அந்த ஆலோசனையாளருக்கு செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக 2022 யூன் முதல் 2024 மே வரை ரூபா 3,496,789 தொகை செலுத்தப் பட்டிருந்தது. மேலும் இந்த ஆலோசனையாளரின் சேவை 06 சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டதுடன் அதற்காகவும் திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை. | மேற்கொள்ளப்படும். | |
| (ஊ) | 2017 ஒக்தோபர் 25 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 05/2017 | அரச கம்பனிகளின் சிரேஸ்ட நிலையின் உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய மாதாந்த தொழிற் தகைமைப் படி சேவைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு செலுத்த வேண்டியிருந்த போதிலும் அந்த எல்லைக்கு முரணாக ரூபா 10,000 மாதாந்தப் படி செலுத்தப்பட்டமையால் 06 உத்தியோகத்தர்களக்கு 2023 ஆம் ஆண்டில் ரூபா 493,367 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க தொழிற் தகைமைப் படி செலுத்த வேண்டியிருந்ததுடன் மேலதிக கொடுப்பனவுகள் அறவிடப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | 2017 மே 16 ஆந் திகதிய இலக்கம் DMS/1741 என்ற முகாமைத்து சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம். | பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் பிரதி பொது முகாமையாளர்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட மாதாந்தப் படி முறையே 95,000 மற்றும் ரூபா 90,000 ஆக இருந்த போதிலும் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கு ரூபா 250,000 மற்றும் பிரதி முகாமையாளருக்கு ரூபா 150,000 மாதாந்தப் படி செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் போது பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கும் பிரதி பொது முகாமையாளருக்கும் மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை முறையே ரூபா 1,860,000 மற்றும் ரூபா 2,094,400 ஆகும். | கையளிக்கப்பட்ட கடமையின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கும், உள்ளார்ந்த பொறுப்புக்களுக்கும் ஏற்ப ஊதிய அளவு வழங்க வேண்டும் என தீர்மானித்து பிரதி பொது முகாமையாளரினதும், நிறைவேற்று உத்தியோகத்தரினதும் அடிப்படை சம்பளம் முறையே ரூபா 150,000 மற்றும் ரூபா 250,000 வரை உயர்த்துவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானம் எடுத்திருந்தது. | முகாமைத்து சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட படிகள் மாத்திரம் செலுத்துதல் வேண்டும். மேலதிக கொடுப்பனவுகள் அறவிடப்படல் வேண்டும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதான அலுவலகத்தில் 200 இற்கு மேற்பட்ட நிலையான தொலைபேசி இணைப்புக்களுக்கு இடையே 175 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையான தொலைபேசி இணைப்புக்கள் செயலிழந்த நிலையில் காணப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டின் போது இலங்கை டெலிகொம் நிறுவனத்திற்கு தொலைபேசிக் கட்டணமாக ரூபா 10,588,673 செலுத்தப்பட்டிருந்தது. அதில் செயலிழந்த தொலைபேசி இணைப்புக்களைத் துண்டித் கொள்வதற்கோ அல்லது ஏனைய மாற்று வழிகளை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2025 சனவரி மாதத்தின் போது இது தொடர்பான ஆய்வு மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயலிழந்த தொலைபேசி இணைப்புக்களை செயற்பாட்டுக்கு கொண்டு வருவதற்கோ அல்லது துண்டித்துக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் ஒன்றிணைந்த கூட்டுயற்சி வள திட்டமிடல் முறைமை (ERP system) | எதிர்வரும் காலப்பகுதியில் இறுதி முறைமைக் கணக்காய்வு மற்றும் | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் கம்பனியின் |

| | | | |
|---|---|---|---|
| | விரிவுபடுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 201 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்தப் பெறுகை பணிகளுக்குரிய சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படாது இருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தகாரருக்கு செலுத்தும் போது இலங்கை தகவல் தொழில் நுட்ப முகவராண்மை நிறுவனத்தின் (ICTA) இறுதி முறைமைக் கணக்காய்வு மற்றும் பரிசோதனைக் கணக்காய்வுத் திகதியான 2024 மே 07 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் உடன்படிக்கையின் பிரகாரம் உத்தரவாதக் காலம் முடிவடைந்த பின்னர் முறைமைக் கம்பனிக்கு கையேற்கப்படாது இருக்கும் போது 2023 ஆம் ஆண்டில் முறைமையில் பராமரிப்பு செலவினமாக ரூபா 30.559,286 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் இந்த முறைமை ஊடாக கம்பனியின் சம்பள முகாமைத்துவம் மற்றும் பாதீடு செய்தல் போன்ற பணிகளை நிறைவேற்ற முடியாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | பணனர்களின் ஏற்றுக் கொள்ளலைப் பரீட்சித்து ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டிய 10 சதவீத நிறுத்தி வைத்தல் தொகை விடுவிக்கப்படும். ERP முறைமை கம்பனியின் தகவல் தொழில்நுட்ப பிரிவிற்கு கையேற்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். ICTA கையளித்திருந்த போதும் சம்பள முகாமைத்துவம் மற்றும் பாதீகள் மேற்கொள்ள முடியாதிருந்தமை அறிவிக்கப்பட்டுள்ளது. | தேவையைத் தீர்மானித்து சாத்தியவள ஆய்வு ஒன்றும் மேற்கொள்ளப்படல் வேண்டும். முறைமையை கம்பனிக்கு கையேற்பதற்கும், முறைமையைக் கணக்காய்வு செய்து மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் சம்பள முகாமைத்துவம் பாதீடு செய்தல் போன்ற பணிகள் நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியுமான வகையில் முறைமையைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மேற்கூறப்பட்ட புதிய முறைமையை ஸ்தாபித்தல் ஆரம்பிக்கின்ற சந்தர்ப்பத்தின் போது காணப்பட்ட முறைமை ஸ்தாபித்த ஒப்பந்தகாரருக்கு ரூபா 83,000,000 செலுத்தி வேலை பூரத்தி அறிக்கை இன்றி ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தம் அறிவிக்காமல் முடிவுறுத்தியமை தொடர்பாக பழைய ஒப்பந்தகாரரால் கம்பனிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கிற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 7,656,904 தொகை செலவிடப்பட்டிருந்ததது. | இது தொடர்பாக SOFT WATCH நிறுவனத்தால் வழங்கப்பட்டிருந்த ரூபா 19,817,578 ஆன செயலாற்றல் காப்புறுதி, காசோலை இலக்கம் 471504 மூலம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அதன் மூலம் நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தைக் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்தத்தை பூர்த்தி செய்தல் கவனம் இன்றி மேற்கொண்டிருந்தமையால் அதன் மூலம் கம்பனிக்கு ஏற்பட்டிருந்த நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | விற்பனை மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்திற்காக பரிசுகளை வழங்குவதற்கும், நிறுவனத்தில் ஊழியர்களை பெற்றுக் கொள்வதற்கும் ஆக ரூபா 5,112,850 செலவிட்டு 315 | இந்த பெறுகைகளை மேற்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையுடன் 02 தொலைபேசி மாதிரிகளுக்கான மதிப்பீடு | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளாத உத்தியோகத்தர்களுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | கையடக்கத் தொலைபேசிகள் கொள்வனவு செய்யும் பெறுகைகளின் போது அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3.1(அ) இன் பிரகாரம் மொத்த கிரய மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்படாது இருந்ததுடன் 2.3.2(இ) இன் பிரகாரம் மாதிரிகளை உள்ளடக்கிய கேள்வி ஆவணங்களுக்காக தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் 5.3.11 மற்றும் 5.4.8 வழிகாட்டியின் பிரகாரம் கேள்வி கோரும் ஆவணங்களில் கேள்வி காப்புறுதி மற்றும் செயலாற்றல் காப்புறுதி தொடர்பாக காண்பிக்கப்படாது இருந்ததுடன் 8.9.1 வழிகாட்டியின் பிரகாரம் வழங்குனருடன் முறையான ஒப்பந்த உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | செய்யப்பட்ட கூறுவிலை குறிப்பிடப்பட்டிருந்தது. தற்போது பெறுகைகள் ஆகக் குறைந்த கால எல்லையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றமையால் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலம் கேள்வி ஆவணங்களை அங்கீகரிப்பதாயின் தேசிய போட்டியாளர் கேள்வி கோருவதன் கீழ் கோரப்படுகின்ற கேள்விகளுக்காக மாத்திரம் ஆகும். இந்த பெறுகைகளுக்காக வழங்குனருடன் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. சந்தை விலை ஒப்பீட்டு முறையின் கீழ் கோரப்படுகின்ற பெறுகைகளுக்காக கேள்வி காப்புறுதி அல்லது செயலாற்றல் காப்புறுதி பெறப்பட்டிருக்கவில்லை. | எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கம்பனியின் கொட்டாவ மெகா விற்பனைச் சாலைக்காக நவீன சந்தைத் தொகுதி பாஸ்கட் மற்றும் இறாக்கைகள் வழங்கி ஸ்தாபிக்கும் பெறுகைகளின் போது பெறுகைகள் வழிகாட்டி 2.6.1(அ)(ii) மற்றும் (iv) இன் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மாதிரிகள் மற்றும் கேள்வி ஆவணங்கள் மீளாய்வு செய்து அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பெறுகைகளுக்கான கோரிக்கைகள் மேற்கொள்கின்ற பிரிவினால் உரிய தொழில்நுட்ப அறிவுடன் உள்ள உத்தியோகத்தரின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட மாதிரி பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அங்கீகாரத்துடன் வழங்கப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | கம்பனியால் ரூபா 2,354,000 தொகையில் 15 லெப்டொப் கணனிகள் கொள்வனவு செய்யும் போது பெறுகைகள் வழிகாட்டி 4.3.1(அ) இன் பிரகாரம் மொத்தக் கிரய மதிப்பீடு தயாரித்தல் மற்றும் 2.11.1(இ) இன் பிரகாரம் பெறுகை முறையில் தீர்மானம் எடுக்கப்படாது இருந்ததுடன் 5.3.11 மற்றும் 5.4.8 பந்திகளின் பிரகாரம் கேள்வி கோரும் ஆவணங்களில் கேள்விக் காப்புறுதி மற்றும் செயலாற்றல் காப்புறுதி தொடர்பான தகவல்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | வருட ஆரம்பத்தில் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத சகல பெறுகைகளுக்காகவும் மதிப்பீட்டுப் பெறுமதி தயாரித்து அதற்காக பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளப்படுவதுடன் கம்பனியின் நாளாந்த செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குத் தேவையான அவசரத் தேவைகளுக்கு நிலையான | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறே வழிகாட்டி 8.9.1 இன் பிரகாரம் ஒப்பந்தகாரருடன் முறையான ஒப்பந்த உடன்படிக்கையிலும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்யும் போது பெறுகையில் வெளிப்படையாக இல்லாத வகையில் பெறுகை வழிகாட்டியின் 2.14.1 இன் வரையறையின் கீழ் பெறுகைத் தன்மையின் பிரகாரம் பெறுகை முறை தீர்மானிக்கப்படுகின்றது. சந்தை விலை ஒப்பீட்டு முறையின் கீழ் கோரப்படுகின்ற பெறுகைகளுக்காக கேள்விக் காப்புறுதி மற்றும் செயலாற்றல் காப்புறுதி பெறப்படாது இருந்ததுடன் இதுவரையில் ரூபா 05 மில்லியனுக்கு மேற்பட்ட ஒவ்வொரு பெறுகைகளுக்காகவும் செயலாற்றல் காப்புறுதி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மேலும் இந்தப் பெறகைகளுக்குரிய ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. | |
| (ஊ) | ரூபா 1,480,000 தொகையில் Island Frezer set & bottle cooler கொள்வனவு செய்யும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.3.2(இ) பந்தியின் பிரகாரம் மாதிரிகளை உள்ளடக்கி கேள்வி ஆவனங்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் அங்கீகரித்தல் மற்றும் 5.3.11 மற்றும் 5.4.8 பந்தியின் பிரகாரம் கேள்வி மதிப்பீட்டு ஆவணங்களில் கேள்வி காப்புறுதி மற்றும் செயலாற்றல் காப்புறுதி தொடர்பான தகவல்கள் குறிப்படப்படவில்லை. மேலும் 8.9.1 இன் பிரகாரம் ஒப்பந்தகாரருடன் முறையான ஒப்பந்த உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவில்லை. | பெறுகைகள் கோரப்பட்ட பிரிவின் தொழில் நுட்ப அறிவுடன் உள்ள உத்தியோகத்தர்களினால் உறுதிப்படுத்தப்பட்ட மாதிரிகளுடன் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆகக் குறைந்த கால எல்லையின் கீழ் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமையால் தொழில் நுட்ப மதிப்பீட்டிற்கு குழுவிற்கு தேசிய போட்டியாளர் கேள்வி கோருதலின் கீழ் கோரப்படுகின்ற பெறுகைகள் மாத்திரம் சமர்ப்பிக்கப்படுவதுடன் எதிர் காலத்தில் சகல பெறுகைகளும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சந்தை விலை | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்பீட்டு முறையின் கீழ் கோரப்படுகின்ற பெறுகைகளுக்காக கேள்விக் காப்புறுதி மற்றும் செயலாற்றல் காப்புறுதி பெறப்படாது இருந்ததுடன் தற்போது ரூபா 05 மில்லியனுக்கு மேற்பட்ட சகல பெறுகைகளுக்காகவும் செயலாற்றல் காப்புறுதி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மேலும் இந்த பெறுகைகளுக்குரிய ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. | |
| (எ) | ரூபா 5,058,500 தொகையில் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்குரிய பெறுகைகளின் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.11.1(இ) இன் பிரகாரம் பெறுகை திட்டத்தின் தீர்மானம் மற்றும் 2.3.2(இ) இன் பிரகாரம் மாதிரிகளை உள்ளடக்கிய கேள்வி ஆவணங்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அங்கீகரிக்கப்படாது இருந்ததுடன் 5.3.11 மற்றும் 5.4.8 பந்திகளின் பிரகாரம் கேள்வி மதிப்பீட்டு ஆவணங்களில் கேள்வி காப்புறுதி மற்றும் செயலாற்றல் காப்புறுதி தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | சந்தை விலை ஒப்பீட்டு முறையின் கீழ் கூறுவிலை கோரப்படுகின்ற பெறுகைகளுக்காக கேள்விக் காப்புறுதி அல்லது செயலாற்றல் காப்புறுதி பெற்றுக் கொள்ளப்படவில்லை. எனினும் தற்போது ரூபா 05 மில்லியனுக்கு மேற்பட்ட சகல பெறுகைகளுக்காகவும் செயலாற்றல் காப்புறுதி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | 2019 ஆம் ஆண்டின் போது லங்கா சத்தொச விற்பனைச் சாலைகள் 08 இற்காக வழிப்பதனாக்கி இயந்திரம் வழங்குதல் மற்றும் பொருத்துவதற்கான பெறுகைகள் சத்தொச நிர்மாண மற்றும் பொறியியல் தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த கம்பனியால் 2023 ஆகஸ்ட் 14 ஆந் திகதி ரூபா 9,017,581 பெறுமதியான 08 பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் கம்பனியின் பொறியியல் பிரிவினால் பெறுகைகளுக்குரிய எந்த ஒரு ஆவணமும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த பட்டியலின் பிரகாரம் சத்தொச விற்பனைச் | தற்போது இது தொடர்பான விசாரணைகளுக்காக சத்தொச நிர்மானம் மற்றும் பொறியியல் தனியார் கம்பனி உத்தியோகத்தர்கள் காணப்படாமையினால் புதிய உத்தியோகத்தர் தரப்பு நியமிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பாக ஆராய்ந்து பதில் சமர்ப்பிக்கப்படும். | பெறுகைகளுக்குரிய ஆவணங்கள் முறையாக பேணிச் செல்ல வேண்டியிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் குறித்துரைத்த பிரகாரம் கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.<br><br>பெறுகைகள் வழிகாட்டிக் கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | சாலைகள் 08 இனதும் விற்பனை முகாமையாளர்களினால் வளிப்பதனாக்கி இயந்திரம் சிறந்த நிலையில் கையேற்கப்பட்டமைக்கும் அது இருப்பு புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டமைக்கும் இருப்பு பற்றுச்சீட்டு விநியோகிக்கப் பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2024 யூன் 10 வரையில் அது கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | | எடுத்தல் வேண்டும். |

## 4.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் கம்பனியின் 3,836 விற்பனை நிலையங் களுக்காக பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டதுடன் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் விற்பனைக் கடை முகாமையாளர், உதவி விற்பனை முகாமையாளர், சிரேஸ்ட விற்பனை உதவியாளர் மற்றும் களஞ்சிய உதவியாளர் என்ற 04 பதவிகளுக்குரிய வெற்றிடங்கள் 726 காணப்பட்டது. | 2020 ஆம் ஆண்டில் கொவிட் தொற்று நோயின் காரணமாக சேவையை விட்டுச் சென்றமை அதிகரித்தமையும், ஆட்சேர்ப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டமையும் காரணமாக இருந்தது. | வெற்றிடமான பதவிகளுக்காக ஊழியர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டின் இறுதியின் போது கம்பனியால் 573 ஊழியர்கள் நாளாந்த சம்பள கொடுப்பனவு அடிப்படையில் விற்பனைக் கடைகளுக்காக சேர்க்கப்பட்டிருந்தனர். இந்த ஊழியர்களின் வருகை மற்றும் வெளிச் செல்கை கைவிரல் அடையாள இயந்திரம் மூலம் குறிப்பிடப்படாது இருந்ததுடன் கையொப்ப பதிவேட்டின் அடிப்படையாகக் கொண்டு 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 349,041,862 சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது புதிதாக 20 விற்பனை நிலையங்கள் அளவில் திறப்பதற்கும் ஒவ்வொரு வருடமும் புதிதாக 10 விற்பனைச் சாலைகளை விஞ்சிய எண்ணிக்கையில் திறந்து வைக்கப்பட்டதன் காரணமாக சேவை தேவையின் அடிப்படையில் ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். 2022 ஆம் ஆண்டின் நாளாந்த கொடுப்பனவு அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்ட ஊழியர்களுக்காக செலவிடப்பட்ட கிரயத்துடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டில் ஏற்பட்ட செலவினம் குறைவடைந்துள்ளது. நாளாந்த சம்பளம் செலுத்தும் | சகல ஊழியர்களுக்காகவும் கைவிரல் அடையாள இயந்திரம் மூலம் வருகை, வெளிச் செல்கை குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அடிப்படையில் சேர்க்கப்பட்ட ஊழியர்கள் தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடுத்தப்படாமையினால் வருகை மற்றும் வெளிச் செல்கைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு கைவிரல் அடையாள இயந்திரம் மூலம் மேற்கொள்ளுதல் வசதியீனமாகக் காணப்பட்டமையால் வருகை வெளிச் செல்கை கையொப்ப பதிவேட்டின் மூலம் வருகை வெளிச் செல்கை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (இ) | விற்பனை மற்றும் இணைய வழி ஊடான விற்பனைகள் தொடர்பாக (Head of Marketing & Online Trading) மற்றும் பிரத்தியேக செயலாளர் பதவி என்ற இரண்டிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி இரண்டு உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டதுடன் சேர்க்கப்பட்ட திகதியில் இருந்து 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சம்பளம் மற்றும் படிகளாக அந்த இரண்டு உத்தியோகத்தர்களுக்கும் கூட்டுமொத்தமாக ரூபா 7,188,133 செலுத்தப் பட்டிருந்தது. | இந்த இரண்டு பதவிகளிலும் வெற்றிடங்கள் காணப்பட்டமையால் பணிப்பாளர் சபையின் முன் அங்கீகாரத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர். இந்த பதவிகள் இரண்டும் சேவைத் தேவையின் அடிப்படையில் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பாக இருந்ததுடன் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் அடிப்படையில் ஒப்பந்த காலம் முடிவடைந்ததுடன் பதவி கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | ஆட்சேர்த்தல் மேற்கொள்ளப் படுவதாயின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் மாத்திரம் மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட 20 பதவிகளுக்குரிய வெற்றிடங்கள் 852 காணப்பட்ட போதும் விற்பனை உதவியாளர் பதவியில் 281 ஊழியர் மிகை காணப்பட்டது. இந்த மிகையான ஊழியர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி சேர்க்கப்பட்டிருந்தனர். | 2017 ஆம் ஆண்டின் போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் 400 விற்பனைக் கடைகளுக்காக விற்பனை உதவியாளர் பதவிக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினராக 1149 அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும் 2017.12.31 ஆந் திகதியில் இந்தப் பதவியின் கீழ் 1746 ஊழியர் தரப்பு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மேலும் 2018/2019 கால எல்லையில் களஞ்சிய உதவியாளர் பதவி | மிகை ஊழியர்களுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தொடக்கம் விற்பனை உதவியாளர் பதவிகள் 160 இற்கு அண்ணளவாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.<br><br>2023 ஆம் ஆண்டின் ஏப்ரல் முதல் விற்பனைக் கடைகளில் ஆரம்ப சேவை தொகுதியில் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பை மேற்கொள்வதற்கு அங்கீகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. விற்பனை / சந்தைப்படுத்தல் உதவியாளர் தொகுதியில் ஊழியர் மிகை குறைத்துக் கொள்வதற்கு 2024 யூலை 01 முதல் சிரேஸ்ட விற்பனை உதவியாளர் பதவிக்கு 223 ஊழியர்களுக்காக பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது. | |
| (உ) | 2021 பெப்ரவரி 05 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் ஒவ்வொரு பதவிகளுக்காகவும் காண்பிக்கப்பட்டுள்ள குறித்துரைத்த கால எல்லையில் வினைத்திறமை காண் தடைப் பரீட்சை நடாத்த வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2024 யூன் 13 ஆந் திகதி வரையில் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை நடாத்தப்படாது இருந்ததுடன் ஊழியர்களை நிரந்தரமாக்கும் போதும், பதவி உயர்வு வழங்கும் போதும் வினைத்திறமைகாண் தடை பூர்த்தி செய்யப்பட்டிருந்ததா என கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது தற்போது ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை நடாத்துதல் கட்டாயமாக இல்லாதிருந்தமையால் நிறுவனத்திற்கு உரிய வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை திட்டம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்க வில்லை. | ஆட்சேர்த்தல் நடைமுறையின் பிரகாரம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |